| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திருமதி.பிலோமினாள்மேரி<br>க.பெ.திரு. ஜோசப்பிரகாஷ் | அ.வ.எண்.380/2015 | 27.03.2026 |

<u>குறுக்கு விசாரணை</u>

1) இவ்வழக்கில் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டவர் எனக்கு பாட்டி என்றால் சரிதான், எனது மாமியாரின் தாயார். இவ்வழக்கில் வா.சா.2 யார் என்றால் எனது மாமியார். எனது கணவர் எனக்கு உறவினரா என்றால் ஆமாம். இவ்வழக்கு விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் இல்லை, எனது பாட்டியும், மாமியாரும் சொல்லி தெரியும். இவ்வழக்கை என்ன சர்வே எண்ணிற்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் புல எண்.207/3B.

2) மேற்படி புல எண்ணை பொறுத்து மட்டும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோமா என்றால் புல எண்.207/3B மற்றும் புல எண்.207/3A2. புல எண்.207/3B எனது பாட்டிக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு என்ன ஆவணம் பார்த்துள்ளேன் என்றால் எனது தாத்தா இன்னாசிமுத்து பெயரில் உள்ள செட்டில்மெண்ட் பத்திரத்தை பார்த்துள்ளேன். மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம்.

3) மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தை எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது என்றால் 1930 ல். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் தான் வா.சா.ஆ.2 என்றால் சரிதான். வா.சா.ஆ.2 யை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்துப்பார்த்துள்ளேன். வா.சா.ஆ.2 ல் சொத்து விபரத்தில் புல எண்.207/3B எங்குள்ளது என்றால் பழைய புல எண்.141/3 ல் 1–1/2 செண்ட் என்று உள்ளது. மேற்படி 1–1/2 செண்ட் தான் புல

எண்.207/3B ல் உள்ள சொத்தா என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ல் மேற்படி 1–1/2 செண்ட்டிற்கு நான்கெல்லை என்ன கண்டுள்ளது என்றால் தேரோடும் வீதிக்கு தெற்கு, யாகப்பன் சேர்வை குடியிருக்கும் மனைக்கு மேற்கு, மதலைமேரியம்மாள் வீட்டு குடியிருப்பிற்கு வடக்கு, சின்னசாமி சேர்வை ஓடுவில்லை வீட்டிற்கு கிழக்கு.

4) புல எண்.141/3 ன் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 11 செண்ட். வா.சா.ஆ.2 ல் சொத்து விபரத்தில் புல எண்.141/3 ல் மேல்புறம் 6 டிசமல் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேலும், மேற்படி மேல்புறம் 6 ல் வடபுறம் 4 டிசமல் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் கண்ட மேல்புறம் 6 செண்டில் வடபுறம் 4 செண்ட் என்பது, வா.சா.ஆ.15 பிராது மாதிரி வரைபடத்தில் A அட்டவணை சொத்தை குறிக்கும் என்றால் சரிதான்.

5) மேற்படி வா.சா.ஆ.15 பிராது மாதிரி வரைபடத்தில் A அட்டவணை சொத்திற்கு எல்லையாக தேரோடும் வீதிக்கும் தெற்கு என்று உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ல் A அட்டவணை சொத்திற்கு கிழக்கே யாருடைய சொத்து உள்ளது என்றால் எங்களுடைய சொத்து தான் உள்ளது. அப்படியானால் ராயப்பசேர்வை மனை வா.சா.ஆ.15 ல் எங்கு உள்ளது என்றால் B அட்டவணை சொத்திற்கு கிழக்கே உள்ளது.

6) வா.சா.ஆ.15 பிராது மாதிரி வரைபடத்தில் மதலையம்மாள் மனை எங்குள்ளது என்றால் A அட்டவணை சொத்திற்கு தெற்கே உள்ளது. வா.சா.ஆ.15 பிராது மாதிரி வரைபடத்தில் இனியாசி ஓடுவில்லை வீடு எங்குள்ளது என்றால் A அட்டவணை சொத்து தான் இனியாசியின் ஓடுவிலலை வீடு. எனது பாட்டியும், எனது மாமியாரும் தங்களது

சாட்சியங்களில், A அட்டவணை சொத்திற்கு மேல்புறம், இனியாசி ஓட்டுவில்லை வீடு உள்ளதாக கூறியுள்ளனர், இந்நிலையில் நான் சொல்வது சரியா அல்லது அவர்கள் சொல்வது சரியா என்றால் வயது மூப்பின் காரணமாக எனது பாட்டியும், மாமியாரும் தவறாக கூறியுள்ளனர், நான் சொல்வது தான் சரி.

7) வா.சா.ஆ.15 ல் B அட்டவணை சொத்திற்கு தெற்கே யார் உள்ளார் என்றால் கரோலின்மேரியின் வீடு உள்ளது, முன்பு அங்கு அந்தோணிதாஸ் இருந்தார். வா.சா.ஆ.2 ல் தெற்கு எல்லையாக என்ன உள்ளது என்றால் குடியிருப்பு. வா.சா.ஆ.15 ல் B அட்டவணை சொத்திற்கு தெற்கே மதலைமேரியம்மாள் வீடு உள்ளதாக காட்டப்படவில்லை என்றால் சரிதான், அந்தோணிதாஸ் வீடு உள்ளதாக காட்டப்பட்டுள்ளது.

8) மேற்படி அந்தோணிதாஸின் மூதாதையர்கள் எவரும் மதலைமேரியம்மாள் என்று உள்ளனரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ல் சொத்து விபரத்தில் கண்ட கதவு எண்.169/9 உள்ள வீடானது, வா.சா.ஆ.15 ல் ABC அட்டவணை சொத்துக்களில் எதில் உள்ளது என்றால் B அட்டவணை சொத்தில் உள்ளது. மேற்படி B அட்டவணை சொத்திற்கு மேற்கே சந்து உள்ளதா என்றால் உள்ளது, மேற்படி சந்து A அட்டவணை சொத்துடன் சேர்ந்தது.

9) மேற்படி சந்திற்கு மேற்கே தான் A அட்டவணை சொத்தில் கண்ட வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி A அட்டவணை சொத்திற்கு மேல்புறம் யார் உள்ளார் என்றால் சின்னசாமியின் வீடு உள்ளது. A அட்டவணை சொத்திற்கு தெற்கில் யார் உள்ளார் என்றால் ஆரோக்கியசாமியின் மனைவி சின்னம்மாள் வீடு உள்ளது. வடக்கில்

தேரோடும் வீதி உள்ளது என்றால் சரிதான்.

(வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)